# வென்றிவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE**

**Girraween Public School, Bando Road, Girraween, NSW 2145**


## தமிழ் அறிவுப் போட்டிகளுக்கான விதிமுறைகள்

# தமிழ் அறிவுப்போட்டி 2023: ஆண்டு 5 முதல் 12 வரை

- ஆண்டு 5, ஆண்டு 6, ஆண்டு 7, மற்றும் ஆண்டு 8 28-10-2023 அன்றும் 04-11-2023 அன்றும்
- ஆண்டு 9 முதல் ஆண்டு 11: 28-10-2023 அன்றும் 04-11-2023 அன்றும் தமிழ் அறிவுப் போட்டிகள் நடாத்தப்படும். ஒவ்வொரு வகுப்பு மாணவர்களிற்கும் போட்டிகள் தனித்தனியாக நடைபெறும்.
- இந்தவருடம் தமிழ் அறிவுப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றிலிருந்து அரை இறுதிப்போட்டிக்கு 8 மாணவர்களும், இரண்டாம் சுற்றிலிருந்து இறுதிப்போட்டிக்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.
- ஒவ்வொரு வகுப்புகளிற்கும் மாதிரி வினாக்கள் எமது இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளது. நீங்கள் wtsc.org.au என்னும் இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## போட்டிக்கான வினாக்கள்

1. வகுப்புக்களில் அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்.
2. தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.

## போட்டி விதிமுறைகள்

### கால் இறுதிப்போட்டி

1. கால் இறுதிப்போட்டி வகுப்புகளில் நடைபெறும்.
2. 15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
3. 30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
4. மூன்று அல்லது நான்கு விடைகளில் சரியான விடையைத் தெிவு செய்ய வேண்டும். (Multiple choice questions).
5. சில வினாக்களிற்கு விடைகள் கொடுக்கப்படமாட்டாது. மாணவர்கள் சரியான விடையைக் கூறவேண்டும். (Open Questions)
6. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் மாத்திரமே கொடுக்கப்படும்.
7. நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர் ஒருவரும் (அந்த வகுப்பில் படிக்காத மாணவர்களின் பெற்றோர்) கடமையாற்றுவார்கள்.

### அரை இறுதிப்போட்டி, இறுதிப்போட்டி

1. இப்போட்டிகள் வினா விடைப் போட்டியாக (Quiz) நடைபெறும்.
2. கால் இறுதிப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாணவர்கள் கொண்ட இரண்டு குழுக்கள் இப்போட்டிகளில் பற்குபற்றுவார்கள்.
3. ஒவ்வொரு குழுக்களிலும் அதிகூடிய புள்ளிகளை பெறும் இரண்டு மாணவர்கள் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.
4. போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படும் போது முதலில் மணியை (Bazar) அழுத்துபவரிற்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
5. சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும் (குறைக்கப்படும்).
6. முதல் மாணவன் தவறாக பதிலளித்தால், அடுத்த மாணவர்களிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும், தவறாக பதில் கூறினால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.
7. ஒரு மாணவர் பதிலளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும்.
8. 15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
9. 30% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
10. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் கொடுக்கப்படும்.

### பரிசில்கள்:

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்படும். பங்குபற்றிய அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.